<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**</u>

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 விசுவாவசு வருடம் ஆனித் திங்கள் 30-ம் நாள்
2025 ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14 ஆம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.2/2025

இன்

இடைநிலை மனு எண்.3/2022

இன்

அசல் வழக்கு எண்.1/2020

(CNR.No.TNTR21-000002-2020)

...

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், மத்தூர் கிராமம் & காலனி, பஜனை கோவில் தெருவில் வசிக்கும் ராமன் மகன் கொல்லாபுரி (இறந்துவிட்டார்)
2. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், மத்தூர் கிராமம் & காலனி, பஜனை கோவில் தெருவில் வசிக்கும் பழனி மகன் சுமார் 37 வயதுள்ள லாரன்ஸ்
3. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், மத்தூர் கிராமம் & காலனி, பஜனைகோவில் தெருவில் வசிக்கும் பழனி மகள் சுமார் 35 வயதுள்ள பியூலா
4. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், மத்தூர் கிராமம் & காலனி, பஜனை கோவில் தெருவில் வசிக்கும் பழனி மகன் சுமார் 33 வயதுள்ள வர்கீஸ்
5. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், மத்தூர் கிராமம் & காலனி, பஜனைகோவில் தெருவில் வசிக்கும் பழனி மகள் சுமார் 30 வயதுள்ள பிரியா ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், எம்.ஜி.ஆர் நகர், புதுவண்ணாரப்பேட்டை என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 52 வயதுள்ள ரத்தினம்
2. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், எம்.ஜி.ஆர் நகர், புதுவண்ணாரப்பேட்டை என்ற முகவரியில் வசிக்கும் ரத்தினம் செட்டியார் மனைவி சுமார் 40 வயதுள்ள தனலட்சமி

... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

திருத்தணி நகர நிலஅளவையரை நீதிமன்றத்தில் ஆவணங்களுடன்

ஆஜராகி சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப அனுமதி கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறை விதி 75–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நாள்:10.02.2025.

இம்மனுவிற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.20/–செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 25.06.2025 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் G. கமலக்கண்ணன், V. பார்த்தசாரதி ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் B. கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், உரிய வாய்ப்பு அளித்தும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதுரைக்கு தயாராக இல்லாததால் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>**உத்தரவாணை**</u>

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
2. திருத்தணி நகர நிலஅளவையரை நீதிமன்றத்தில் ஆவணங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப அனுமதியளித்து உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
3. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது

<u>**செலவுத் தொகைப் பட்டியல்**</u>

இருதரப்பிலும் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை.

2025 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 14 ஆம் நாள் என் கையழுத்திடப்பட்டு, இந்நீதிமன்ற இலட்சினைப் பதிப்பிக்கப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.07.23 11:36:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.